# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM ජේසියම්



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 57 | 17.05.2023 (செவ்வாய்க்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00


# வடக்கு, கிழக்கு இடைக்காலசபை யோசனையுடன் வந்த ரணில், விக்கி! கூட்டாக நிராகரித்த தமிழ் கட்சிகள்..!



பக்கம் 5

**புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது எமது பிரதான கோரிக்கை.**



## இராணுவ முகாமில் பணிபுரியும் தமிழ் பெண்களை ஏமாற்றிய இராணுவம்..! வீதிக்கு இறங்கி போராட்டம்

முல்லைத்தீவு – கொக்காவில் இராணுவ முகாமில் பணிபுரியும் தமிழ் பெண்கள் தற்போது வீதிக்கு இறங்கி போராட்டம் நடத்துகின்றனர். கொக்காவில் இராணுவ முகாமில் இருந்து வவுனியா இராணுவ முகாமுக்கு செல்லும் படியாக அறிவித்தல் கிடைத்துள்ள நிலையில், அங்கு தம்மால் செல்ல முடியாதெனத் தெரிவித்தே இப்போராட்டம் இடம்பெறுகிறது.

பக்கம் 5

## மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிக்க மனோ விருப்பம்!



பக்கம் 5

மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிப்பது பிரச்சினை இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். அதே போல், எவ்வாறான நியமனங்கள் இடம் பெற்றாலும், பாராளுமன்றத்தை கலைத்து

## தமிழ் இனப்படுகொலை ஊர்திப் பவனிக்கு இராணுவம் இடையூறு..!



தமிழ் இனப்படுகொலையின் நினைவாக முன்னெடுக்கப்பட்டுள்ள ஊர்திப் பவனிக்கு இராணுவத்தினரால் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறித்த ஊர்திப் யாழ்ப்பாணம் – சாவகச்சேரி பேருந்து நிலையத்திற்கு அண்மையில் பயணித்த போது இடையூறு ஏற்படுத்தபட்டிருந்தது.

பக்கம் 5



பக்கம் 5

## பெரும் துயர் நிகழ்ந்த தினத்தில் தொல்லியல் ஆக்கிரமிப்புக்கு நாள் குறிப்பது என்பது இனகுரோதத்தின் உச்சம்:

### முன்னாள் எம்பி சந்திரகுமார்

கிளிநொச்சி – உருத்திரபுரத்தில் அமைந்திருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க சிவன் (உருத்திரபுரதீஸ்வரர்) ஆலயத்தில் எதிர்வரும் 18.05.2023 அன்று தொல்பொருட்திணைக்களம் ஆய்வு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டிப்பதானது இனகுரோதத்தின் உச்சமாகவே

# கண்ணிவெடி அகற்றும் பணியின்போது பயங்கரம் முல்லைத்தீவில் பெண் மீது பாலியல் வன்புணர்வு..!

## காட்டுக்குள் இழுத்துச் சென்று கொடுமை

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் நிறுவனத்தில் பணியாற்றும் பெண் ஒருவர் முல்லைத்தீவு மாவட்டம் மணலாறு பகுதியில் தனது பணியில் ஈடுபட்டிருந்தபோது இருவர் அவரை பாலியல் கொடுமைக்கு உட்படுத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தில் பணியாற்றும் அந்தப் பெண் படுகாயமடைந்த நிலையில் இன்று காலை 9 மணியளவில் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

வெலிஓயாப்படையினரின் சோதனைச் சாவடியிலிருந்து சில நூறு மீற்றர்கள் தூரத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் எந்தவித உத்தியோகபூர்வ



பக்கம் 5



## அதிரடியாக பதவி நீக்கப்பட்ட ஆளுநர்கள்!

பக்கம் 5

# இராணுவ புலனாய்வாளர்களின் மிரட்டல்!

## தொடர் அச்சத்தில் வெடுக்குநாறிமலை பூசகர் உட்பட சிலர்



பக்கம் 5

வெடுக்குநாறிமலை ஆலய விக்கிரகங்களை அடித்து உடைத்தவர்களை ஏன் இன்னும் கைது செய்யவில்லை என்ற கேள்வியும் மன வேதனையும் அதிகரித்துக்கொண்டிருப்பதாக சிவகுரு ஆதின முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார். ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார். இது தொடர்பில் மேலும் கூறுகையில்,“வெடுக்குநாறி மலையில் உடைக்கப்பட்ட சிலைகளுக்கு பதிலாக அந்தந்த

# வரலாற்றில் காணாமல் போகும் ஒரு சைவத் தமிழ்க் கிராமம்!

# அம்பாறையில் இருந்து ஒளிந்துள்ள மர்மங்கள்!!!



அம்பாறை மாவட்டத்தின் வரலாற்றில் இருந்து மறைந்து போகும் ஒரு சைவத் தமிழ்க் கிராமம் தொடர்பில் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவரி பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சமீபத்தில் மட்டக்களப்பின் சமூக ஆர்வலரும், வரலாற்றுப் பட்டதாரியுமான வை.சத்தியமாறன் இணையதளம் ஒன்றில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள புராதன சிவன் ஆலயம் ஒன்றின் புகைப் படங்களைப் பிரசுரித்து அவ்வாலயம் தமிழர்களால் பாதுகாக்கப்படவேண்டும் என்ற தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

அப்புகைப்படங்களில் இருந்து அது ஒரு புராதன ஆலயமாக இருக்கலாம் என்பதை கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் எஸ். சிவகணேசனிடம் எடுத்துக் கூறிய போது அவ்விடத்தில் ஆய்வு செய்வதற்கான சகல ஏற்பாடுகளையும் அவர் மேற்கொண்டிருந்தார்.

அவரின் முயற்சிக்கு பல்கலைக்கழக துணைவேந்தர், கலைப்பீடாதிபதி ஆகியோர் வழங்கிய ஆதரவும், உதவிகளும் ஆய்வுக் குழுவினரைப் பெரிதும் உற்சாகப்படுத்தியது.



இந்த ஆய்வுக்குழுவில் வரலாற்றுத் துறை தலைவர் எஸ். சிவகணேசன், மற்றும் விரிவுரையாளர் செல்வி கிறிஸ்ரினா நிரோசினி, ஊடகவியலாளர் வை.சத்தியமாறன் ஆகியோருடன் கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி தில்லைநாதனும் இணைந்து கொண்டமை ஆலயம் அமைந்துள்ள வட்டாரத்தின், சமூக நிலமைகளை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவியது.

இந்த ஆலயம் அம்பாறை மாவட்டத்தில் தீகவாபி, குடுவில் ஆகிய வட்டாரங்களை உள்ளடக்கிய ஆலங்குளம் என்ற இடத்தில் அமைந்துள்ளது.

இவ்வட்டாரத்தில் புழக்கத்தில் இருந்து வரும் பல இடப்பெயர்கள் பண்டுதொட்டு இங்கு தமிழர்கள் வாழ்ந்து வந்ததன் அடையாளங்களாகக் காணப்படுகின்றன. ஆயினும் தற்போது இங்கு ஒரு தமிழ்க் குடியிருப்பைத் தானும் காணமுடியவில்லை.

இந்நிலையில் ஆலயத்தைச் சுற்றாடலில் பரந்த அளவில் வாழ்ந்து வரும் ஏனைய இன மக்கள் தமிழர்கள் இங்கு வாழவில்லை எனவும், அவர்கள் கரும்புத் தோட்டங்களில் வேலைசெய்வதற்காக இங்கு வந்த போது அவர்களின் வழிபாட்டிற்காகவே முன்பொரு காலத்தில் கட்டப்பட்ட ஆலயமே தற்போது அழிவடைந்த நிலையில் காணப்படுகிறது என அவர்கள் எம்மிடம் கூறிய புதக்கதை எமக்கு அதிர்ச்சியான செய்தியாக இருந்தது.

ஏனெனில் இற்றைக்கு ஐந்து சகாப்தங்களுக்கு முன்னரே குடுவில் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களை ஆய்வு செய்த பேராசிரியர் பரணவிதான அக்கல்வெட்டுக்களில் ஒன்றை ஆதாரமாகக் காட்டி இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்விடத்தில் வாழ்ந்த "திஸ" என்ற தமிழ்ப் பெண்ணின் தலைமையில் தமிழ் வணிகர்கள் ஒன்று சேர்ந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதை உறுதிப்படுத்தி இருந்தார்.

பேராசிரியர் இந்திரபாலா இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் மொழியால் ஒரு இனக்குழுவாக வாழத் தொடங்கியதற்கு இக்கல்வெட்டையும் முக்கிய ஆதாரமாகக் காட்டுகின்றார்.

அண்மையில் கிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வில் எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இச்சாசனங்கள் தமிழ் மொழியில் தமிழ் வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் நாகன், ணாகன், தம்பன், வண்ணக்கன் முதலான பெயர்கள் பொறித்த சாசனங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

இச்சாசனங்கள் பற்றி பேராசிரியர் பத்மநாதன் அண்மையில் வெளியிடப்பட்ட நூல் ஒன்றில் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இவ்வகையான மட்பாண்டச் சாசனங்கள் தமிழகத்தை அடுத்து கிழக்கிலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை கிழக்கிலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றுக்கு புதுவெளிச்சமூட்டுவதாக உள்ளது.

தொல்லியல் அறிஞர்கள் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு பெருங்கற்காலப் பண்பாடு என்ற புதிய நாகரிகத்தை அறிமுகப்படுத்தியவர்கள் நாக இன மக்கள் எனக் கூறுகின்றனர்.

இப்பண்பாட்டு மக்கள் கிழக்கிலங்கையில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களில் நாகன், ணாகன் முதலான பெயர்கள் இடம்பெற்றிருப்பது கிழக்கிலங்கையில் வாழ்ந்த பூர்வீக தமிழர்கள் நாக இனக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதை மேலும் உறுதி செய்வதாக உள்ளது.



இவ்வரலாற்றுப் பின்னணியிலேயே அம்பாறை ஆலங்குள ஆலயத்தின் தோற்றத்திற்கான காரணங்களை நோக்குவது பொருத்தமாகும். நீண்ட காலத்திற்கு முன்னரே ஆலங்கேணியில் வாழ்ந்த தமிழர்கள் இவ்வாலயத்தைக் கைவிட்டதன் காரணமாக தற்போது இவ்வாலயம் பெருமளவுக்கு அழிவடைந்து ஆலமரங்களுக்கு மத்தியில் வழிபடப்பட முடியாத ஆபத்தைத் தரும் வெறும் கட்டிடமாகக் காணப்படுகின்றது.





ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் வளர்ந்துள்ள பெரிய ஆலமரங்களின் கிளைகளும், வேர்களும் ஆலயச் சுவர்கள் சிலவற்றிற்கு பாதுகாப்பு அரண்களாக உள்ளன.

இவ்வாலயம் சிறிய விமானத்துடன் கூடிய கர்ப்பக்கிரகம், அந்தராளம், முன்மண்டபம், பலிபீடம், கொடிக்கம்பம் என்பவற்றைக் கொண்டு கட்டப்பட்டதை ஆய்வுக் குழுவினரால் அடையாளப்படுத்த முடிந்தது.

நீண்டகால வரலாற்றைக் கொண்டிருக்கும் இவ்வாலயம் பிற்காலத்தில் சீமெந்து கொண்டு மீள் உருவாக்கம் செய்யப்பட்டதை ஆலயத்தின் கட்டிட வடிவங்களும் விமானத்தின் கலை வடிவங்களும் உறுதி செய்கின்றன.

ஆயினும் இவ்வாலயம் மிகத் தொன்மையானதென்பதை ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் புதையுண்டு காணப்படும் பெருமளவு செங்கற்கள் உறுதிசெய்கின்றன.



அதிலும் கற்பக்கிரகம், அந்தராளம் என்பவற்றின் உட்பாகங்கள் முழுக்க செங்கற்களால் கட்டப்பட்டவையாகக் காணப்படுகின்றன. செங்கற்கள் கொண்டு கட்டப்பட்ட அந்தராளத்தின் முன்பக்கச் சுவர் சீமேந்து கொண்டு பூசப்பட்ட நிலையில் செங்கற் சுவர் தெளிவாகக் காணப்படுகிறது.

இந்த வேறுபாடுகளைக் கொண்டு செங்கற்களால் கட்டப்பட்ட கர்பக்கிரகம், அந்தராளம் ஆலயத்தின் தொடக்ககால நிலையில் அதன் வெளிப்புறம் மட்டும் பிற்காலத்தில் சீமேந்து கொண்டு மீள் உருவாகம் செய்யப்பட்டதாகவும், முன் மண்டபம், பலிபீடம் முதலான கட்டிடங்கள் ஆலயம் தோன்றிய கால அத்திவாரங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டதாக அல்லது ஆலயத்தை விரிவுபடுத்த பிற்காலத்தில் சீமேந்து கொண்டு கட்டப்பட்ட ஆலய பாகங்களாக இருக்கலாம் எனக் கூறமுடியும்.

இவ்வாலயத்தின் தோற்றகாலத்தை உறுதியாகக் கூறக்கூடிய கல்வெட்டுக்களோ விக்கிரகங்களோ இதுவரை கிடைக்கவில்லை.

ஆலயத்தின் கர்பக்கிரகம், அந்தராளம் என்பவற்றிற்கு உள் நுளைய முடியாதவாறு பெரிய ஆலமர வேர்கள் காணப்படுகின்றன. அதற்குள் கொடிய விசப்பாம்புகள் குடியிருப்பதற்குரிய தடயங்கள் பரவலாகக் காணப்படுகின்றன.

இதனால் அச்சமின்றி அக்கட்டிடப் பகுதிகளுக்குச் சென்று ஆய்வினை மேற்கொள்ள முடியவில்லை. இருப்பினும் வெளியில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு கர்பக்கிரகத்தில் தெய்வ விக்கிரகங்களை வைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பீடம் முழுமையாக சிதைவடைந்துள்ளமை தெரிகின்றது.

அவ்விடம் ஆழமாகத் தோண்டப்பட்டு பீடம் இருந்த இடம் பெரும் குழியாகக் காணப்படுகின்றது.

பீடத்தின் பின்பக்கச் சுவரில் இருக்கும் திருவாசி புகைபடர்ந்த நிலையில் அதன் கலைவடிவங்கள், தெளிவற்றுக் காணப்படுகின்றன.

இருப்பினும் எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு இவ்வாலயம் மிகப் பழமையானது என்பதை உறுதிப்படுத்த முடிகிறது.

அவற்றுள் கர்பக்கிரகத்தின் மேற்பக்கச் சுவரில் குறுக்காகவைக்கப்பட்ட நான்கு கற்பலகைகள் மீது மேல் நோக்கி வட்டமாக இரு தளங்களில் கட்டப்பட்ட விமானத்தின் அமைப்பு, விமானம் அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட செங்கற்களின் அமைப்பும் அவற்றின் நீள அகலங்கள், கர்பக்கிரம், அந்தராளம் என்பவற்றின் வடிவமைப்பு, அவற்றின் நீள, அகலங்கள், வாசற்பகுதிகளில் அமைக்கப்பட்ட அகலமான கற்தூண்கள் என்பன 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொலநறுவை, திருமங்களாய் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட சோழர் கால ஆலயங்களை நினைவுபடுத்துவதாக உள்ளன.

நாட்டில் எதிர் காலத்தில் தொல்லியல் திணைக்கள அனுமதியுடன் இவ்வாலயப் பகுதியில் விரிவான தொல்லியல் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டால் இந்த ஆலயத்தின் தோற்றகாலம், அதன் கலைமரபுகள், வழிபடப்பட்ட தெய்வங்கள், கால ரீதியான ஆலய வளர்ச்சி, மாற்றம், ஆலயத்திற்கு சொந்தமாக இருந்த அசையும், அசையாத சொத்துக்கள், ஆலயத்தைப் பராமரித்த மக்கள், வழிபாட்டு மரபுகள் தொடர்பான பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும் என்பதில் ஐயமில்லை. என அவர் தெரிவித்துள்ளார்.

## சிங்கள ஆக்கிரமிப்புக்களை தடுக்க தமிழ்க்கட்சிகளுக்கு அழைப்பு: சிவஸ்ரீ கணேசலோகநாதன்




வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கம் மற்றும் நில அபகரிப்புகளை தடுப்பதற்கு அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் ஒன்றிணைந்து போராட முன்வரவேண்டும் என கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ கணேசலோகநாதன் குருக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஸ்டிப்பில் நேற்றைய தினம் (15.05.2023) கலந்துகொண்டு கருத்து தெரிவிக்குபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில், முள்ளிவாய்க்கால் சம்பவத்தின் பின்னர் உப்புக்கஞ்சியை மட்டுமே பாதிக்கப்பட்டோர் தமது உணவாக கடைப்பிடித்தனர். அதனை மீட்டிப்பாக்கும் வகையிலும் எதிர் கால சமூகத்திற்கு இந்த விடயம் தெரியவேண்டும் என்பதற்காகவும் இந்த நினைவேந்தலை வருடாந்தம் நாங்கள் நினைவுகூர்ந்துவருகின்றோம்.

முள்ளிவாய்க்கால் நினைவுவாரம் அனுஸ்டிக்கும் இந்த நேரத்தில் தமிழ் தேசிய கட்சிகளுக்கும் தமிழ் தேசியத்தில் பற்றுக் கொண்டவர்களுக்கு ஒரு கோரிக்கையினை கிழக்கிலங்கை இந்தக்குருமார் ஒன்றியத்தினூடாக முன்வைக்க விரும்புகின்றோம். தற்போது தையிட்டி, திருகோணமலை போன்ற இடங்களில் பௌத்தமயமாக்கலை மூலாதாரமாக கொண்டு பௌத்தர்கள் இல்லாத இடங்களிலெல்லாம் தற்போது பௌத்த ஆலயங்கள் கட்டப்படுகின்றன. இது போன்ற சமயங்களில் தமிழ் தேசியம் சார்ந்த அனைவரும் கட்சி பேதங்களை மறந்து எமது நிலப்பிரதேசத்தினை பாதுகாக்கவேண்டும்.

இதேவேளை தமிழர்களின் தாயகப்பிரதேசமான வடக்கு கிழக்கை நாங்கள் விட்டுக்கொடுக்க தயாராக இல்லை என தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வில் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் அலுவலகத்தில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு உயிர் நீர்த்தவர்களின் நினைவாக மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து உப்புக்கஞ்சி காய்ச்சப்பட்டு அதனை மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திருகோணமலை அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட இந்துக்குருமார், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஒன்றிய உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்கால் வாரத்தில் யாழ்.பல்கலையில் இராணுவம், பிக்குவுடன் வெசாக் கொண்டாட்டம்





யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இராணுவத்தினர் மற்றும் பிக்கு பங்கேற்புடன் நேற்று பல்கலைக்கழக மருத்துவபீட வளாகத்தில் வெசாக் கொண்டாட்டம் இடம்பெற்றுள்ளது.

இராணுவத்தினர் சிவில் உடையில் வளாகத்திற்குள் நுளைந்து அலங்காரப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை பிக்கு ஒருவரும் அழைத்துவரப்பட்டு அவர் தலைமையில் வெசாக் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

## முள்ளிவாய்க்கால் கஞ்சி குடித்த பொலிஸாருக்கு உள்ளக விசாரணை



முள்ளிவாய்க்கால் கஞ்சி குடித்த கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதி போக்குவரத்து பொலிஸாருக்கு உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு கடந்த (10.05.2023) அன்று கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

இதன்போது ஏ9 பிரதான வீதியில் பயணிப்பவர்களுக்கு ஏற்பாட்டாளர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் வீதியில் பயணித்த கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதி போக்குவரத்து பொலிஸாரும் பல்கலைகழக மாணவர்கள் வழங்கிய முள்ளிவாய்க்கால் கஞ்சியினை சிரட்டையில் பெற்று குடித்துள்ளனர்.

இதன் பின்னர் வீதி போக்குவரத்து பொலிஸார் முள்ளிவாய்க்கால் கஞ்சி குடிக்கும் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளிவந்துள்ளதுடன் அவை சிங்கள ஊடகங்களிலும் வெளிவந்துள்ளன.

இதனை தொடர்ந்தே குறித்த இரண்டு பொலிஸார் மீதும் விசாரணையை மேற்கொள்ளுமாறு கொழும்பிலிருந்து தகவல் வழங்கப்பட்டு அவர்களுக்கு உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2009 இறுதி யுத்தத்தின் போது உணவின்றி தவித்த மக்களுக்கு அப்போது அவர்களின் உயிர்களை பாதுகாக்க கஞ்சி வழங்கப்பட்டது. இதனை நினைவு கூறும் வகையில் வருடந்தோறும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி கிழக்கில் மிக மோசமாக சுருக்குவலை தொழில்! முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு




வடமராட்சி கிழக்கில் கட்சி சார்ந்தவர்கள் ஆறு சுருக்குவலை தொழில்களை வைத்திருப்பதாகவும், அவர்களை கடற்படை கைது செய்யும் போதும் உடனடியாக குறித்த கட்சியின் பொறுப்பாளர் கடற்படையுடன் தொடர்பு கொண்டு அவர்களை விடுவிப்பதாகவும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார். தனது அலுவலகத்தில் நேற்று (15.05. 2023) பிற்பகல் நடத்திய ஊடக சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடமராட்சி கிழக்கில் மிக மோசமாக சுருக்குவலை தொழில் இடம்பெற்று வருகிறது.

எப்போதாவது இருந்து விட்டு ஒரு சில படகுகளை கடற்படை பிடிக்கும் போதும், அதற்கு என்ன நடக்கிறது என்று தெரியவில்லை.

இன்று கடலில் எவ்வளவோ அநியாயங்கள் அட்டூழியங்கள் இடம்பெற்று கொண்டிருக்கின்றன. அதேபோன்று கடல் வளங்களும் அழிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன.

ஆனால் கடற்தொழில் அமைச்சர் கண்ணை மூடிக்கொண்டு இருக்கின்றார். இன்று ஓரிரு வருடங்களில் மக்கள் பழைய நிலைக்கு வந்து தொழில்களில் ஈடுபட முடியும் என அமைச்சர் தெரிவிக்கின்றார்.

ஆனால் இன்று பாரம்பரிய தொழில்களை கைவிட்டு மக்கள் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.






தேசியம் www.thesiyamnews.com THESIYAM

# வவுனியாவில் புகையிரத பாதையினை மறித்து கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்



வவுனியாவில் புகையிரத பாதையினை மறித்து கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் புகையிரத பாதை அமைக்கும் செயற்பாடு நேற்றைய தினம் (15.05.2023) இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வவுனியா - தோணிக்கல் வீதியிலிருந்து இருந்து ஏ9 வீதிக்கு செல்வதற்காக ஆலடி பகுதியில் அமைந்துள்ள புகையிரத கடவையினை கடந்த பல வருடங்களாக சுமார் 1000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் தற்போது வடக்கிற்கான புகையிரத பாதையினை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த புகையிரத கடவை ஊடாக செல்வதற்கு தடையேற்படுத்தும் முகமாக புகையிரத பாதையினை அமைக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இப்போராட்டத்தில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்சாரம் வழங்குமாறு கோரி மட்டக்களப்பில் ஒல்லிக்குளம் குடியேற்ற கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்






மட்டக்களப்பு - ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஒல்லிக்குளம் குடியேற்ற கிராம மக்கள் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் நேற்றைய தினம் (15.05.2023) காத்தான்குடி இலங்கை மின்சாரசபை அலுவலகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் பெறுவதற்காக தாம் விண்ணப்பித்து ஒரு வருடம் கடந்து விட்ட நிலையிலும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், வெளி இடங்களிலிருந்து குடியேறிய மக்களுக்கென அமைக்கப்பட்டுள்ள ஒல்லிக்குளம் குடியேற்ற கிராமத்தில் சுமார் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்கள் மின்சாரம் பெறுவதற்கென விண்ணப்பித்து ஒரு வருட காலமாகியும் இதுவரை மின்னிணைப்பு ஏற்படுத்தப்படவில்லை.

இக்கிராமத்தில் மின்சாரமின்மையால் மாணவர்கள் கல்வி கற்க முடியாமலும், பொது மக்கள் பாம்புத் தொல்லையாலும் பெரும் அவலங்களை எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பாக காத்தான்குடி பிரதேச மின் அத்தியட்சகர் கனகசபை சிவேந்திரனிடம் கேட்டபோது குறித்த கிராமத்திற்கு மின்னிணைப்பை ஏற்படுத்த சுமார் 20 இலட்சம் ரூபா வரை செலவாகும்.

இதற்கான நிதி இலங்கை மின்சார சபையிடம் இல்லை. நிதி கிடைத்தவுடன் குறித்த பணியினை நிறைவு செய்யலாம் என தெரிவித்தார்.

# திருகோணமலையில் இருந்து பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பிக்குகளின் பாத யாத்திரை



தாய்லாந்து உபசம்பதா நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு 270 வருடப் பூர்த்தியினை நினைவுகூறும் நோக்கில் திருகோணமலையில் இருந்து கண்டி நோக்கிய தாய்லாந்து பௌத்த பிக்குகளின் பாத யாத்திரை நேற்று (15) கந்தளாய் பகுதியை கடந்து தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது.

தாய்லாந்து பௌத்த பிக்குகளின் பாத யாத்திரை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை - கண்டி பிரதான வீதி ஊடான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பாதயாத்திரையின் போது மக்கள் விருந்துபசாரம் வழங்கி வரவேற்பளித்து வருகின்றனர்.

இந்த பாதயாத்திரை திருகோணமலையில் இருந்து பிரதான வீதி ஊடாக கண்டியை நோக்கி 10 நாட்கள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய ரீதியில் சாதித்த யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்..!





இலங்கை பாடசாலை கூடைப்பந்தாட்ட சங்கத்தால் தேசிய ரீதியாக நடாத்தப்பட்ட 16 வயதுக்குட்பட்டோருக்கான டிவிசன் சி பிரிவு கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் சம்பியனாகியுள்ளது.


கொழும்பில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென். பிரிட்ஜெட்ஸ் கான்வென்ட் அணியினை முதல் கால் பாதியில் 4:4 ரீதியிலும், இரண்டாவது கால்பாதியில் 8:8 ரீதியிலும், மூன்றாவது கால்பாதியில்16:10 ரீதியிலும், நான்காவது கால் பாதியில் 26:14 ரீதியிலும் கைப்பற்றி யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இச் சம்பியன் பட்டம் மூலம் இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட 16 வயது பிரிவு போட்டியில் வடமாகாண பாடசாலை ஒன்று பெற்ற முதலாவது சம்பியன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

போட்டியின் சிறந்த வீராங்கனையாக ஜெபோஷினி கைசிங் ரவீந்திரகுமார் தெரிவு செய்யப்பட்டதுடன் போட்டியின் சிறந்த தற்காப்பு வீராங்கனையாக விஜயரூபன் சகானா தெரிவானார்.

யாழ் திருக்குடும்ப கன்னியர் மட கூடைப்பந்தாட்ட அணிக்கு தனுஸ்காந்த் ராஜசோபனா பயிற்றுவிப்பாளராக கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் கடல்நீர் பெருக்கு: பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள்



மட்டக்களப்பு- களுவாஞ்சிகுடி கடலில் திடீரென ஏற்பட்ட கடற்பெருக்கு காரணமாக கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

களுதாவளைப் பகுதியில் நேற்றைய தினம் (15.05.2023) கடல் நீர் உட்புகுந்ததால் அப்பகுதியிலுள்ள மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியியுள்ளது.

இதனையடுத்து கடல் நீர் திடீரென கிராமத்தை நேக்கி மேலெழுந்து வருவதை அவதானித்த கடற்றொழிலாளர்கள் தோணி, படகுகள், உள்ளிட்ட கடற்றொழில் உபகரணங்களை பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தியுள்ளனர்.

வருடாந்தம் இக்காலப்பகுதியில் கடல்நீர் பெருக்கெடுக்கும் நிலையில் இந்தமுறை சற்று அதிகமாகக் காணப்படுவதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை களுவாஞ்சிகுடி, ஓந்தாச்சிமடம், தேத்தாதீவு, மற்றும் செட்டிபாளையம் போன்ற பல பகுதிகளிலுமுள்ள கடற்பிராந்தியங்களிலும், இவ்வாறு கடல்நீர் கிராமங்களை நோக்கி உட்புகுந்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

## வடக்கு, கிழக்கு இடைக்கால...

"உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் புதிய அரசமைப்பு விரைவில் உருவாக்கப்பட வேண்டும். அதைவிடுத்து நிர்வாக விடயம் சம்பந்தமான பேச்சுக்களில் தொடர்ச்சியாக ஈடுபடுவது பிரயோசனமற்ற செயல்." – இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடம் எடுத்துரைத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வடக்கு – கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான இரண்டாம் சுற்றுப் பேச்சு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் கூறியவை வருமாறு:-

"நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் ஆவணமொன்றை எடுத்து வந்து, சில விடயங்களை எடுத்துரைத்தார். ஜனாதிபதியிடமும் அந்த ஆவணம் இருந்தது.

குறித்த ஆவணத்தில் எதிரணி வரிசையில் விக்னேஸ்வரன் மட்டுமே கையொப்பம் இட்டிருந்தார். ஏனையோர் ஆளுங்கட்சினர். அத்துடன், பிரதிநிதித்துவ அரசியல் அந்தஸ்து அற்றவர்களும் கையொப்பமிட்டுள்ளனர்.

இதற்கு நாம் எதிர்ப்பை வெளியிட்டோம். இதனை மக்கள் பிரதிநிதிகளின் ஆவணமாக எடுத்துகொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டோம்.

இந்த ஆவணத்தை அடிப்படையாக வைத்து ஜனாதிபதி குழுவொன்றை அமைக்கவும் முற்பட்டார். அதற்கு நாம் மறுப்புத் தெரிவித்தோம். அப்படியான குழுவொன்றை அமைத்தால் வெறுமனே பேச்சு நடத்தப்படுவது மட்டுமே இடம்பெறும், காத்திரமாக எதுவும் நடக்காது எனச் சுட்டிக்காட்டினோம். அதில் நாம் பங்கேற்கபோவதில்லை எனவும் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தோம்.

அத்துடன், உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் புதிய அரசமைப்பு விரைவில் உருவாக்கப்பட வேண்டும். இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன. அறிக்கைகள் உள்ளன. ஒரு வரைபு கூட உள்ளது. இதைச் செய்வதை விடுத்து, நிர்வாகம் சம்பந்தமான பேச்சுகளில் மட்டுமே ஈடுபடுவது பிரயோசனமற்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது எமது பிரதான கோரிக்கை. எனினும், இவை தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை." – என்றார்.

## இராணுவ முகாமில் பணிபுரியும்...

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

"நாங்கள் தமிழ் பிள்ளைகள். மொத்தமாக 104 பேர் இருக்கின்றோம். 2012 இல் இருந்து இந்த முகாமில் தான் நாங்கள் கடமை புரிகிறோம்.

எங்களை வேலைக்கு எடுக்கும்போது கிளிநொச்சியில் தான் வேலை என்று எடுத்தார்கள். ஆரம்பத்தில் எங்களை வேலை கிடைக்கும் போது ஆமி வேலை என்று சொல்லவும் இல்லை.

நாங்கள் வந்து விட்டோம் என்பதற்காகவே இவ்வளவு காலமும் வேலை செய்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய சேவை காலமும் நெருங்கி விட்டது. ஆனால் இன்று திடீரென்று எங்களை வவுனியா செல்லும்படி சொல்கிறார்கள்.

கஷ்ட நிலைமையில் தான் நாங்கள் இந்த வேலைக்கு வந்தோம். ஆனால் வவுனியாவுக்கு செல்வதற்கு குடும்ப சூழலும் பொருளாதார நிலைமையும் இடம்கொடுக்காது.

இது தொடர்பில் பல முறை பேசியும் எந்த விதமான பதில்களும் கிடைக்கவில்லை. எங்களை ஆண்கள் தங்கும் இராணுவ முகாமுக்கே அனுப்புகிறார்கள்.

எங்களால் இந்த முகாமை விட்டு வேறு எந்த இடங்களுக்கும் செல்ல முடியாது" என்றனர்.

## மஹிந்த ராஜபக்ஷவை மீண்டு...

பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டில் மிகப் பெரிய ஊழல் நடக்கிறது, எனக்கு பிரதமர் பதவியை கொடுங்கள் என்று மகிந்த கேட்கிறார், யாரிடம் கேட்கிறார்? எமது ஜனாதிபதியிடம், நாங்கள் சொல்கிறோம், தயவுசெய்து அதைச் செய்யுங்கள்.

தயவு செய்து மகிந்தவை பிரதமராக்குங்கள். பிரச்சினை இல்லை. ஆனால் உடனடியாக பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும்.

எமக்கு தேர்தலை பெற்றுக் கொடுங்கள். மக்களின் ஆதரவு யாருக்கு இருக்கின்றது என்று தெரிந்துக் கொள்ள வேண்டும்.

நாம் அனைத்துக்கும் தயாராகவே இருக்கின்றோம். நாம் தேர்தலில் வெற்றிப் பெறுவோம் என்பது உறுதி.– என்றார்.

## தமிழ் இனப்படுகொலை ஊர்...

முள்ளிவாய்க்கால் நினைவு சுமந்த ஊர்திப் பவனி, முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமாகியிருந்தது.

முள்ளிவாய்க்கால் கடற்கரையில் நினைவுச் சுடர் ஏற்றப்பட்ட பின்னர், நினைவுப் பேரணி ஆரம்பமாகியிருந்தது.

இந்தப் பேரணி முல்லைத்தீவிலிருந்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களினூடாக மீண்டும் முள்ளிவாய்க்காலைச் சென்றடையவுள்ளது.

அந்த வகையில் முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தை – நினைவூட்டும் வகையிலான ஊர்திப் பவனி இன்று கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணித்துள்ளது.

குறித்த ஊர்தி சாவகச்சேரி பேருந்து நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் பயணித்த போது இராணுவத்தினர் இடையூறு வழங்கியுள்ளனர்.

இராணுவ அதிகாரி ஊர்தி தொடர்பில் கேள்வி எழுப்பி அதிகாரி வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டமையினால் சில நேரம் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது.

எனினும் குறித்த ஊர்தி தடைகளைத் தாண்டி யாழ்ப்பாணம் நோக்கி பயணித்து இன்றைய நாள் பயணத்தை நிறைவு செய்துள்ளது.

## பெரும் துயர் நிகழ்ந்த தினத்தில்...

நோக்கப்படுகிறது. தமிழ் மக்களுக்கு பெரும் துயர் நிகழ்ந்த ஒரு தினத்தில் தொல்லியல் திணைக்களமும் தனது நடவடிக்கைக்கு நாள் குறித்திருப்பது கண்டனத்திற்குரியது என தெரிவித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

நீண்டகால வரலாற்றைக் கொண்ட ஆலயத்தில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அது சமூக நெருக்கடியையே உண்டாக்கும். நாட்டில் அமைதியையும் சமூக ஒருங்கிணைவையும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக அவற்றைச் சிதைக்கும் விதமாக அரசாங்கமே நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதனால் நாட்டுக்கே பாதிப்புகள் ஏற்படும்.

அத்துடன் இந்த நடவடிக்கையானது யுத்தத்தில் கொல்லப்பட்டோரை நினைவு கொள்ளும் 18.05.2023 அன்று நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருப்பது திட்டமிட்ட ரீதியில் சமூக நெருக்கடியை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுவதாகவே தெரிகிறது. நாட்டில் அமைதிச் சூழலை உருவாக்கி, பிரச்சினைகளுக்குத் தீர்வை கண்டு, பொருளாதார ரீதியில் நாட்டை மீட்டெடுக்க முயற்சிக்கும் தாங்கள், இது தொடர்பாக உடனடியாக உரிய நடவடிக்கையை மேற்கொண்டு, இதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஏற்கனவே வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சிலைகளை அமைப்பது, விகாரைகளைக் கட்டுவது என்றவிதமாகத் தொல்பொருட்திணைக்களத்தினால் பொருத்தமற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் தொல்பொருட் திணைக்களம் என்ற பெயரைக் கேட்டாலே தமிழ், முஸ்லிம் மக்கள் கலவரமடையும் நிலை உருவாகியுள்ளது. இன்று நாட்டுக்குத் தேவையாக இருப்பது அமைதியும் அரசியற் தீர்வும் பொருளாதார மீட்சியுமே. அதற்குரிய துறைகள் சிறப்பாக, துரிதமாகச் செயற்பட வேண்டும். பிரச்சினைகளை உருவாக்கி, சமூகச் சிதைவை உண்டாக்கும் திணைக்களங்களல்ல.

இந்த நாட்டில் மாற்றங்களைக் காண விளையும் விதமாக நாம் செயற்படுவோம். அதற்கான வழிவகைகளை தாங்கள் மேற்கொள்ள வேண்டும் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்ணிவெடி அகற்றும் பணி...

அறிக்கைகளையும் விடுக்கவில்லை. கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பெண்ணை அருகே இருந்த காட்டுக்குள் இருந்து வந்த இருவர் வாயைப் பொத்தி காட்டுக்குள் இழுத்துச் சென்றுள்ளனர்.

அவர்களிடம் இருந்து தப்பி காட்டிலிருந்து அந்தப் பெண் வெளியே ஓடி வந்து விழுந்த பின்னரே ஏனைய பணியாளர்களை அவரைக் கண்டு உதவி செய்து உடனடியாகத் தமது வாகனத்தில் ஏற்றி வைத்தியசாலைக்கு விரைந்தனர்.

பெண் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டாரா என்பது தொடர்பில் இப்போதைக்கு எதுவும் சொல் முடியாது. அவரது உடலில் காயங்கள் காணப்படுகின்றன. அவர் உளவிய ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு உடனடியாக மனநல சிகிச்சை தேவைப்படுவதால் அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தனக்கு

நடந்தவைகள் குறித்துப் பேசக்கூடிய உடல் நிலையிலோ மனநிலையிலே அவர் இல்லாதபடியால் அவருக்கு நடந்தவைகள் குறித்து உறுதியான தகவல்கள் எதனையும் தெரிவிக்க முடியாது என முல்லைத்தீவு வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்..

## அதிரடியாக பதவி நீக்கம்...

வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் ஆளுநர்கள் ஜனாதிபதியினால் நேற்று (15) பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், புதிய ஆளுநர்கள் எதிர்வரும் புதன்கிழமை(17) நியமிக்கப்படவுள்ளனர்.

இதனை ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னாகொட ஆகியோரே பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆளுநர்களின் செயற்பாடுகள் தொடர்பில் எம்.பிக்கள் தொடர்ச்சியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முறைப்பாடுகளை முன்வைத்து வந்த நிலையில் ஆளுநர்களை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவ புலனாய்வாளர்களி...

சிலைகள் தான் வைக்கப்பட்டன. அதாவது முருகன் சிலை இருந்த இடத்தில் வேறொரு முருகன் சிலையும் சிவலிங்கம், அம்மன் சிலைகள் இருந்த இடத்தில புதிய சிவலிங்கம், அம்மன் சிலைகள் வைக்கப்பட்டன. அங்கு எந்த விதி மீறல்களும் நடைபெறவில்லை.

ஆனால் தொல்பொருள் திணைக்களத்தினர் தான் எமது கருத்தை நீதிமன்றில் தவறான அர்த்தத்தில் முன்வைத்தனர்.

இந்நிலையில் தொல்பொருள் திணைக்களத்தினர் மற்றும் நெடுங்கேணி பொலிஸார் ஆகியோர் வெடுக்குநாறிமலை ஆலய பூசகர் ஐயாவையும் நிர்வாகத்தை சேர்ந்த ஒருவரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து கைது செய்தனர்.

பின்னர் ஆலய நிர்வாகத்தின் தலைவரையும் செயலாளரையும் அழைத்து, நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதனூடாக நாங்கள் யாரையும் நினைத்த நேரத்தில் நினைத்ததை போன்று காரணங்கள் எதுவுமின்றி கைது செய்வோம் என்பதை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்."என கூறியுள்ளார்.




தேசியம்
பத்திரிகையில்
உங்கள்
விளம்பரங்களை
பிரசுரிக்க
தொடர்பு
கொள்ளுங்கள்..!
தொலைபேசி :
+94 76 567 3339



# நாட்டை உலுக்கிய குமுதினி படுகொலை 38வது நினைவேந்தல்

குமதினி படகுப் படுகொலையின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு யாழ்ப்பாணம் – நெடுந்தீவிலுள்ள குமுதினி நினைவு தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. குமுதினி படகில் படுகொலை செய்யப்பட்ட 36 பேரின் நினைவாக நெடுந்தீவு இறங்குதுறையிலுள்ள நினைவாலய வளாகத்திலேயே நேற்றைய தினம் (15.05. 2023) குறித்த நினைவேந்தல் இடம் பெற்றுள்ளது.

நேற்றைய தினம் காலை 8.15 மணிக்கு நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள புனித சவேரியார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி திருப்பலியும், சம நேரத்தில் மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள வீரபத்திர பிள்ளையார் ஆலயத்தில் ஆத்மா சாந்தி வேண்டிச் சிறப்புப் பூஜையும் நடைபெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு குமுதினி படுகொலை நினைவேந்தல் குழுமத்தின் நெடுந்தீவு பிரதேச தலைவர் வி.ருத்திரன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடப்பெற்றுள்ளன.

நினைவுத்தூபிக்கான நினைவுச் சுடர் ஏற்றல் மற்றும் மலர் அஞ்சலி செலுத்துதல் ஆகிய நிகழ்வுகளுடன் பசுந்தீவு ருத்திரனின் குருதியின் குமுறல்கள் என்ற கவிதை நூலும் வெளியிடப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்குகின்ற நிகழ்வும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது இந்நிகழ்வுகளில் நெடுந்தீவு பகுதி மதத்தலைவர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

1985 ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து 64 பயணிகளுடன் பயணித்த குமுதினி படகை நடுக்கடலில் வழிமறித்த இலங்கை கடற்படையினர், அதில் பயணித்த குழந்தைகள் பெண்கள் முதியவர்கள் என 36 பேரை வெட்டி படுகொலை செய்துள்ளனர்.

மேலும், குழந்தைகள், பெண்கள் உட்பட மொத்தம் 33 பேர் குத்தியும் வெட்டியும் கொல்லப்பட்டனர். முப்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்தப் படுகொலையில் உயிரிழந்துள்ள மக்களுக்காக நேற்றைய தினம் காலை நெடுந்தீவு குமுதினி நினைவு தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கனடா செல்ல காத்திருக்கும் இலங்கையர்களுக்கு முக்கிய அறிவிப்பு! அம்பலமான மோசடி



கனடாவிற்கு மாணவர் விசாவிற்கு விண்ணப்பிப்பதற்காக கட்டணங்களை அறவிட்டு தனி நபர் ஒவ்வொருவரிடம் இருந்து கிட்டதட்ட 14 லட்சம் ரூபா பெற்றுகொள்ளப்பட்டு மோசடியில் ஈடுபட்ட நிறுவனம் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிலே இந்த மோசடி இடம்பெற்றுள்ளது.

சுமார் 500ற்கும் மேற்பட்டோர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# முள்ளிவாய்க்கால் நினைவு வார நிகழ்வுளை அனைவரும் தயக்கமின்றிக் கலந்து கொள்ளுங்கள்...!



மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு வார நிகழ்வுளை அனைவரும் தயக்கமின்றிக் கலந்து கொள்ளலாம் என சமூக சேவகர் தாமோதரம் பிரதீபன் அழைப்பு விடுத்துள்ளார்.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கல்முனையில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்ற போது குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்ட சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் மே 18 தமிழர் இன வழிப்பு நாளான முள்ளிவாய்க்கால் தினத்தினை அனுஸ்டிப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அதனடிப்படையில் எதிர்வரும் மே 16 மற்றும் மே 17 ஆம் திகதிகளில் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு பகுதியிலுள்ள பிரதான வீதிகளில் இந்நிகழ்வுகளை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

இந்த நிகழ்வுகள் யாவும் இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்கள் அனுபவித்த துயரங்கள் படுகொலைகள் அந்த நேரம் உணவுக்காக அவர்கள் பட்ட கஸ்டங்கள் அந்த நேரம் அவர்கள் உணவாக உட்கொண்ட அரிசியையும் நீரையும் கலந்து அவித்து பருகிய கஞ்சி உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளையும் மேற்படி கூறிய தினங்களில் காட்சி படுத்தவும் வழங்கவும் காத்திருக்கின்றோம். இதன் நோக்கமானது கடந்த யுத்தத்தின் போது எமது மக்கள் அனுபவித்த வேதனைகளை தற்போதைய சந்ததிகள் அறியவும் இச்செயற்பாட்டை முன்னெடுக்கின்றோம்.

எனவே அம்பாரை மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் பொதுமக்களும் இணைந்து மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு வார நிகழ்வுகளில் சிறப்பிக்கவும் உறவுகளுக்காக பிரார்த்தனை செய்யவும் அன்புரிமையோடு அழைப்பதுடன் அனைத்துப் பாதுகாப்பு அனுமதிகளையும் பெற்று ஒழுங்கு செய்துள்ளதால் உறவுகள் அனைவரும் தயக்கமின்றி இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றொம் என்றார். இச்செய்தியாளர் சந்திப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர்களான என். தர்சினி உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# யாழ் பல்கலைக்கழகத்திற்குள் இராணுவப் பிரசன்னம்!!

## வன்மையாக கண்டிக்கின்றது தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை!




யாழ் பல்கலைக்கழகத்தில் சிங்கள சகோதர மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட வெசாக் பண்டிகை நிகழ்வின் போது சிறிலங்கா இராணுவத்தினர் கலந்து கொண்டமை குறித்து பல்கலைக்கழக நிர்வாகம் விரைந்து உரிய பதிலைக் கூற வேண்டும் என்று தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்கள் வெசாக் பண்டிகையை கோலாகலமாக கொண்டாடி இருக்கிறார்கள்.

வெசாக் பண்டிகை நிகழ்வு முடிவடைந்து பத்து நாட்களின் பின்னரே இந்த நிகழ்வு பல்கலை சிங்கள சகோதர மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.


ஆனால் அந் நிகழ்வில் பெருமளவிலான இராணுவத்தினரை காணக்கூடியதாக இருந்தது.

யாழ் பல்கலைக்கழகத்தினுள் சிறிலங்கா இராணுவத்தினரை அனுமதித்தது யார்? பல்கலைக்கழக மாணவர்களா? நிர்வாகமா? யாழ் பல்கலைக்கழகத்திற்குள் சிறிலங்கா இராணுவத்திற்கு என்ன வேலை?

அப்படியானால் 10 நாட்கள் கழித்து மாணவர்கள் இந்நிகழ்வை ஏற்பாடு செய்த காரணம் என்ன? இதற்குப் பின்னால் ஸ்ரீலங்கா இராணுவம் இருக்கின்றதா? அவ்வாறு சிறீலங்கா இராணுவத்தினர் இருப்பார்கள் ஆயின் தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை இதனை வன்மையாக கண்டிப்பதோடு இது தொடர்பில் யாழ் பல்கலை நிர்வாகம் உரிய பதிலை அறிவிக்க வேண்டும் என பேரவையின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.









# தமிழினப் படுகொலை : முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!
# ஐ.நாவின் முன்னாள் அதிகாரி விசேட உரை!



இலங்கையில் நடந்த இறுதிப்போரின் போரின் போது பணியாற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் அதிகாரி கோர்டன் வெயிஸ் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறித்து விசேட உரை வழங்கவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் இறுதிக் கட்ட ஆயுதப் போரின் போது இலங்கையில் ஐக்கிய நாடுகளின் பேச்சாளராக பணியாற்றினார்.

இந்தநிலையில், எதிர்வரும் (18.05.2023) வியாழக்கிழமை நியூயோர்க்கில் அவர் தமது நினைவேந்தல் உரையை நிகழ்த்துவார் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது.

"இலங்கை தொடர்பான ஐ.நா.வின் உள்ளக ஆய்வு அறிக்கையின்படி, 2009 ஆம் ஆண்டின் முற்பகுதியில், ஆறு மாதங்களில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர் மற்றும் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர்.

International Truth and Justice Project (ITJP) அமைப்பு பெப்ரவரி 2017 இல் ஐ.நாவிடம் ஒப்படைத்த, தமிழ்ப் பெண்கள் "பாலியல் அடிமைகளாக" அடைக்கப்பட்டுள்ள இலங்கை இராணுவ "கற்பழிப்பு முகாம்கள்" பற்றிய விபரங்கள். மேலும், ஏப்ரல் 2013 இல் பிரித்தானிய வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலக அறிக்கையின்படி, இலங்கையில் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் போர் விதவைகள் உள்ளனர்.

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணாமல் போனவர்கள், வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள்.

2020 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழு வெளியிட்ட தரவின்படி, உலகில் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் இலங்கையில் இடம்பெற்றது.

ஐ.நா அறிக்கையின்படி, நடந்த கொலைகள் மற்றும் பிற துஷ்பிரயோகங்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகும்.

இலங்கைப் பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதோடு பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழீழம் என்ற ஒரு சுதந்திரமான மற்றும் இறையாண்மை கொண்ட நாட்டை அமைப்பதற்காக தமிழர்கள் பெருமளவில் வாக்களித்தனர்.

இந்த நாடாளுமன்றத் தேர்தல் இலங்கை அரசால் நடத்தப்பட்டது." குறித்த விடயங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் அதிகாரி கோர்டன் வெயிஸ் விரிவான உரை நிகழ்த்தவுள்ளார்.

